டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

Agridoctor.in | 13.02.2025 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 196 - Madurai | Online Edition

# வானிலை மற்றும் பருவநிலை சேவைகள் மத்திய இணையமைச்சர் தகவல்

புது தில்லி, பிப்.13

வானிலை மற்றும் பருவநிலை சேவைகளை துறை சார்ந்த கொள்கைகள் மற்றும் செயல் திட்டங்களுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் பருவநிலை மாற்றங்களை ஏற்று தகவமைத்துக் கொள்வதை வலுப்படுத்துவதற்காக இந்திய வானிலை ஆய்வுத் துறை, தேசிய பருவநிலை சேவைகள் சட்ட வரைவை உருவாக்கி செயல்படுத்த முயற்சி எடுத்து வருகிறது. விவசாயம், நீர் வளம், சுகாதாரம் மற்றும் பேரிடர் மேலாண்மை போன்ற முக்கியமான துறைகளில் முடிவுகள் எடுக்கப்பட இது உதவியாக இருக்கும்.



விவசாயிகளுக்கான வேளாண் ஆலோசனை சேவைகள் வழங்குதல், வெள்ளம் மற்றும் வறட்சி முன்னறிவிப்புக்காக மத்திய நீர் ஆணையத்துடன் இணைந்து பணியாற்றுவது உள்ளிட்டவை இந்தச் சேவைகளில் அடங்கும்.

வானிலை குறித்த கணிப்புகள், தகவல் தொடர்புகள் மற்றும் முன்னறிவிப்பு அமைப்புகளை அமைச்சகம் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது.

புயல்களால் ஏற்படும் தாக்கத்தைக் குறைக்க புயல் முன்னறிவிப்பு அமைப்புகளில் முன்னேற்றங்களைச் செய்ய புவி அறிவியல் அமைச்சகம் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

சமீபத்திய ஆண்டுகளில் புயல்கள் குறித்த உயர் துல்லியமான முன்னெச்சரிக்கைகளை வழங்கும் திறனை இந்திய வானிலை ஆய்வுத் துறை நிரூபித்துள்ளது.




மத்திய அரசு, மாநில அரசுகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்ட பங்குதாரர்களுக்கு வெப்ப அலை முன்னறிவிப்புகள் மற்றும் எச்சரிக்கைத் தகவல்களை இந்திய வானிலை ஆய்வுத் துறை வழங்குகிறது.

புயல்கள், வெப்ப அலைகள் உள்ளிட்ட தீவிர வானிலை நிகழ்வுகளை எதிர்கொள்ள தயாராக இருக்க பொதுமக்களுக்கும் பேரிடர் மேலாண்மை அதிகாரிகளுக்கும் பல்வேறு முன்னறிவிப்புகளை வெளியிடுகிறது.

இத்தகவலை மத்திய அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புவி அறிவியல் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு அளித்துள்ள எழுத்துப் பூர்வ பதிலில் தெரிவித்துள்ளார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# பனையில் மதிப்புக்கூட்டு பொருட்கள் தயாரிப்பதின் முக்கியத்துவம்

கிருஷ்ணகிரி, பிப்.13

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டாரம், புளியம்பட்டி கிராமத்தில் அட்மா திட்டத்தின் வாயிலாக விவசாயிகளுக்கு பனையில் மதிப்பு கூட்டு பொருட்கள் தயாரிப்பதின் முக்கியத் துவம் குறித்து ஒரு நாள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை துணை வேளாண்மை அலுவலர் மூ.வேடியப்பன் தொடங்கி வைத்து பேசுகையில் பனை மதிப்புக்கூட்டு பொருட்களின் சிறப்பையும் அதன் முக்கியத்துவத்தையும் கூறினார். பின்னர் முன்னோடி இயற்கை விவசாயி கிரிஜா, பனையை மூல பொருளாக வைத்து நவீன தொழில்நுட்ப முறையில் கருப்பட்டி, பனங்கற்கண்டு தயாரிப்பது மற்றும் பேக்கரி பொருட்கள் தயாரிப்பதில் பன சர்க்கரை பயன்படுத்துதல், மேலும் பதநீர் பயன்பாட்டின் முக்கியத்துவத்தையும் எடுத்து கூறினார்.




வேளாண் வணிக மற்றும் விற்பனை துறை உதவி வேளாண் அலுவலர் குமார் தேசிய வேளாண் மின்னணு சந்தை குறித்து விளக்கினார். அதன் தொடர்ச்சியாக அப்பகுதி உதவி வேளாண்மை அலுவலர் இயற்கை விவசாயத்தில் பஞ்சகாவ்யா, இயற்கை பூச்சி விரட்டி, மீன் அமிலம், ஜீவாமிர்தம், அமிர்தகரைசல்,கன ஜீவாமிர்தம் ஆகிவற்றின் பயன்பாடுகள் குறித்தும் உபயோகிக்கும் முறை பற்றியும் எடுத்து கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் அன்பரசு உழவன் செயலியின் பயன்பாடுகள் குறித்து விளக்கினார். இப்பயிற்சிகான ஏற்பாடுகளை உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் சண்முகம் மற்றும் கிரிஜா செய்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மல்பெரி சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு முறை குறித்த விவசாயிகள் பயிற்சி

சேலம், பிப்.13

சேலம் மாவட்டம், கொளத்தூர் வட்டாரத்தில் வேளாண்மை துறை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் சாம்பள்ளி கிராமத்தில் விவசாயிகளுக்கு மல்பெரி சாகுபடி தொழில் நுட்பங்கள் மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு முறை குறித்து பயிற்சி நடத்தப்பட்டது.

இந்த பயிற்சியில் கொளத்தூர் வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) ச.அரப்பளீஸ்வரி, தொடங்கி வைத்து வேளாண்மை துறையில் செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து பேசினார்.




இப்பயிற்சியில் பட்டு வளர்ச்சி துறையைச் சார்ந்த பவித்ராதேவி கலந்து கொண்டு இயற்கை முறையில் மல்பெரி சாகுபடி முறைகளான மல்பெரி நாற்றங்கால் உற்பத்தி, பட்டுப்புழு வளர்ப்பு முறை, மல்பெரி பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, பட்டு வளர்ச்சித் துறை மானிய திட்டங்கள் குறித்து பேசினர்.

துணை வேளாண்மை அலுவலர் கோ.லோகநாதன் விவசாயி களுக்கு அடையாள அட்டை வழங்குவது குறித்து வேளாண் அடுக்ககம் குறித்து பேசினார். அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் இந்துமதி அட்மா திட்டங்கள் செயல்பாடுகள் மற்றும் உதவி தொழில் நுட்ப மேலாளர் சிவக்குமார் உழவன் செயலி பயன்படுத்தும் முறைகள் குறித்தும், இறுதியாக உதவி தொழில் நுட்ப மேலாளர் கமலக்கண்ணன் நன்றி உரை வழங்கினார்.

இந்த பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 13.02.2025

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 24 | 28 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 25 | 30 | 57 | உருளை (பிற) | 18 | 22 |
| 1B | கத்திரி(Nadu) | 35 | 40 | 57A | உருளை(ஊட்டி) | 26 | 50 |
| 2 | வெண்டை | 35 | 40 | 58 | மேரக்காய் | 20 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 17 | 20 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 24 | 28 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 17 | 20 | 60 | கேரட் | 60 | 64 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 40 | 46 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 50 | 54 |
| 6 | புடலை | 38 | 42 | 62 | நூல்கோல் | 25 | 30 |
| 7 | பீர்க்கன் | 40 | 46 | 63 | டர்னிப் | 30 | 35 |
| 8 | சுரைக்காய் | 15 | 20 | 64 | மு.கோஸ் | 15 | 20 |
| 9 | பாகற்காய் | 40 | 44 | 65 | மு.கோஸ்(கலர்) | 20 | 24 |
| 10 | கொத்தவரை | 30 | 34 | 66 | காளிபிளவர் | 30 | 34 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 60 | 68 |
| 12 | அரசாணி | 12 | 16 | 68 | பூண்டு | 140 | 160 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 30 | 34 | 69 | இஞ்சி | 38 | 42 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 25 | 30 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 45 | 50 | 71 | பென்னி பீன்ஸ் | 40 | 48 |
| 16 | பெ.வெங்காயம் | 34 | 38 | 72 | குடமிளகாய் | 44 | 48 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 24 | 28 | 73 | ஊட்டி அவரை | 110 | 120 |
| 18 | பச்சை மொச்சை | 40 | 44 | | | | |
| 19 | முருங்கை | 85 | 95 | | | | |
| 20 | தேங்காய் | 60 | 64 | | | | |
| 21 | மாங்காய் | 60 | 80 | | | | |
| 22 | வாழைக்காய் | 38 | 42 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 50 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 40 | 45 |
| 25 | சேப்பங்கிழங்கு | 55 | 60 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 65 | 70 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 30 | 34 | 80 | திராட்சை | 90 | 100 |
| 30 | புதினா | 6 | 7 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 220 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்ச் | 70 | 80 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயக்கீரை | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 40 | 50 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 30 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 70 | 74 |
| 40 | கோவக்காய் | 24 | 28 | 91 | பூவன் | 40 | 44 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 55 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 44 | 48 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 35 | 40 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 12 | 16 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 25 | 30 | 96 | நேந்திரன் | 70 | 75 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 20 | 24 | 97 | செவ்வாழை | 95 | 100 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 25 | 30 | 100 | கறிப்பலா | 40 | 45 |
| 50 | நிலக்கடலை | 55 | 60 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 25 | 30 | 102 | நெல்லிக்காய் | 70 | 75 |
| 52 | புளி | 135 | 145 | 103 | Seedless திராட்சை(ப/க) | 120 | 160 |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 27 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 20 | 24 | | | | |
| 55A | துவரை | 45 | 50 | | | | |

# அங்கக வர்த்தக சான்று பெறும் வழிமுறைகள்



சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் அங்கக வர்த்தக சான்று பெறும் வழிமுறைகள் குறித்த விவசாயிகள் பயிற்சி நாய்க்கன்பட்டி கிராமத்தில் நடைபெற்றது.

வீரபாண்டி அட்மா குழு தலைவர் வெண்ணிலா சேகர் நொச்சி மற்றும் ஆடாதோடா செடிகளை விவசாயிகளுக்கு வழங்கி, அரசு வழங்கும் மானிய திட்டங்களை உரிய முறையில் விவசாயிகள் பயன்படுத்த தனது தலைமை உரையில் கேட்டுகொண்டார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன் அனை வரையும் வரவேற்று இப்பயிற்சியின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம் குறித்து எடுத்து கூறினார். அங்கக சான்றளிப்பு விதை ஆய்வாளர் பாபு பயிற்சியாளராக கலந்து கொண்டு இயற்கை விவசாயம் என்பது வழக்கத்திற்கு மாறான பன்மடங்கு சவால் மிகுந்ததாகும். எனினும், மண்ணையும், அதில் விளையும் பொருட்களையும் சாப்பிடுபவர்களின் நலனையும் கருத்தில் கொண்டு, நஞ்சில்லா உணவை அளிக்க வேண்டும் என்பதே இயற்கை விவசாயிகளின் குறிக்கோள் என்றும் தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத்துறை மத்திய அரசின் தேசிய அங்கக வேளாண்மை செயல்திட்டத்தின்படி வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் ஏற்றுமதி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதல் மற்றும் அங்கீகாரத்தின் மூலமும் செயல்படுத்துப்பட்டு வருகின்றது என்றும் இயற்கை வழி மேலாண்மை முறையில் சாகுபடி செய்யும் விவசாயிகள் தனி நபராகவோ அல்லது குழுவாகவோ உரிய ஆவணங்களை கொண்டு அங்கக விளைபொருட்களை பதப்படுத்துவோர், வணிகம் மற்றும் ஏற்றுமதி செய்வோரும் பதிவு செய்யலாம் என்று பயிற்சி அளித்தார்.

இப்பயிற்சியில் உதவி வேளாண்மை அலுவலர் எம்.தினேஷ், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சி.சரஸ்வதி மற்றும் தீபன் முத்துசாமி ஆகியோர் உடன் இருந்தனர். பயிற்சி முடிவில் விவசாயிகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.


Rithvik Pipe
PIPING FOR LIFE
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
இந்தியாவில் முதல் முறையாக ISI PVC பைப்புகளுக்கு
25 வருட உத்திரவாதம் தரும் ஓரே நிறுவனம்
ஒவ்வொரு பைப்புகான ஆய்வக சோதனை அறிக்கை ஒவ்வொரு பைப்பிலும் QR CODE மூலம் கொடுக்கபட்டுள்ளது.
ஒவ்வொரு பைப்புக்கும் 25 வருட உதிரவாதம் (6 KG - க்கு மேல்)
ஒவ்வொரு ரித்விக் பிவிசி பைப்புகளும் இந்திய தர நிர்ணய பணியகம் (பிஐஎஸ்) நிர்ணயித்த கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தபட்டு தயாரிக்கப்படுகிறது.
ஒவ்வொரு ரித்விக் PVC பைப்புகள் உயர்தர மூலப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. தரம் மற்றும் நீண்ட ஆயுளை உறுதி செய்கிறது.
வியாபார தொடர்புக்கு
வெங்கடரமனன் - 7561822226,9645877779
RITHVIK PIPE

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உயிரி தொழில்நுட்ப மையத்தில் வேளாண் தொழில்நுட்ப தொழில்முனைவோர் சந்திப்பு

கோயம்புத்தூர், பிப்.13

முருங்கை மரத்தின் அனைத்து பாகங்களும் பல தொழில்களில் மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகளுக்கான ஒரு சக்தியாக உருவாகி வருவதால், ஒரு அற்புத மகத்துவ மரம் என்று குறிப்பிடப்படுகிறது. வைட்டமின்கள் ஏ, சி மற்றும் ஈ, புரதம் மற்றும் பல மருத்துவ குணமுள்ள பொருட்கள் நிறைந்த முருங்கை இலைகள், சந்தையின் தேவைக்கேற்ப பொடிகள், மாத்திரைகள் மற்றும் தேநீர்களாக மாற்றப்படுகின்றன. அவை ஆரோக்கிய உணவிற்கான உலகளாவிய சந்தையை பூர்த்தி செய்கின்றன. இந்த பொருட்கள் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்துகிறது, செரிமானத்தை மேம்படுத்துகிறது மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்த்துப் போராடுகிறது.



முருங்கை விதைகளில் இருந்து பெறப்படும் எண்ணெய், அதன் ஈரப்பதம் மற்றும் எதிர்ப்பு பண்புகள் காரணமாக, தோல் பராமரிப்பு துறையில், மதிப்புமிக்க பொருளாக மாற்றப்படுகிறது. 'மோரிங்கா ப்ராமிஸ் வெல்னஸ்' என்ற பெயரில் முருங்கை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் தயாரிப்பாளரும் ஏற்றுமதியாளருமான ரஞ்சித் குமார், சொற்பொழிவு ஆற்றி இளம் தொழில் முனைவோர்களுக்கு தேவையான அறிவுரைகளை வழங்கினார்.

நபார்டின் செயல்பாடுகள், விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டை ஆதரிப்பதில் அதன் முக்கிய பங்கு பற்றிய ஆழமான நுண்ணறிவுகள் குறித்தும் விவசாயிகள், விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs) மற்றும் பழங்குடி குழுக்களுக்கான வட்டி விகிதங்களை நபார்டு எவ்வாறு குறைக்கிறது

என்றும் இதனால் கடன் எளிதாகக் கிடைப்பது பற்றியும், மேலும், மாணவர்கள், தொழில்முனைவோர்கள் மற்றும் ஸ்டார்ட்-அப் நிறுவனர்கள் உள்ளிட்ட பங்கேற்பாளர்கள் நபார்டின் திட்டங்கள் மற்றும் நிதி வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்துதல், நிலையான கிராமப்புற வளர்ச்சியை வளர்ப் பதற்கு அரசு நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவோருக்கு இடையிலான ஒத்துழைப்பின் முக்கியத்துவம் மற்றும் தொடக்க நிறுவனங்களுக்கான கொள்கை உருவாக்கம் மற்றும் நிதி வாய்ப்புகள் குறித்தும் கோவை மற்றும் நீலகிரி மாவட்ட நபார்டு மேம்பாட்டு மேலாளர் சி.திருமலை ராவ் எடுத்துரைத்தார்.

'நான் முதல்வன்' குறுகிய கால பயிற்சி திட்டம் தமிழகத்தில் உள்ள வேலையில்லா இளைஞர்கள் மற்றும் பள்ளி இடைநின்றோரின் நலனுக்காக உருவாக்கப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேளாண்மை, வேளாண் பொறியியல், கால்நடை வளர்ப்பு, பால்வளம், கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், மாற்றுத்திறனாளிகள்




நலன், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி போன்ற தமிழக அரசின் பல்வேறு துறைகள் ஒன்று இணைந்து தொழில்துறையின் திறன் தேவைக்கேற்ப பயிற்சிகளை வழங்கி வருகின்றனர். மேலும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு பதிவு முகமையில் (TN Skills portal) மாணவர்கள் பதிவு செய்வதற்கான வழிமுறைகளையும் கோவை மாவட்ட திறன் மேம்பாடு மையத்தின் பயிற்சியாளர் லலிதா, மாணவர்கள் மற்றும் இளம் தொழில்முனைவோர் களுக்கு எடுத்துரைத்தார். இத்திட்டத்தின் பல்வேறு சிறப்பு அம்சங்கள் குறித்து இளம் தொழில்முனைவோர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துரையாடினர்.

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் புதிய தொழில் முனை வோரை ஊக்குவிப்பதற்கும், விவசாயம், உயிரி தொழில்நுட்பம் மற்றும் உணவுத் தொழில்நுட்பத்தை வணிக மாதிரிகளாக எடுத்துச் செல்ல இளம் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் வேளாண் தொழில்நுட்ப வணிக சந்திப்பு ’2025-ஐ நடத்தி வருகிறது.

இந்நிகழ்வின் இறுதி நிகழ்வாக மகத்துவ முருங்கை, நான் முதல்வன் - குறுகிய கால திறன் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தொடக்க நிறுவனங்களுக்கான (Start-up) கொள்கை உருவாக்கம் மற்றும் நிதி வாய்ப்புகள் என்ற தலைப்பில் உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையத்தில் (12.2.25) அன்று கருத்தரங்கம் நடைபெற்றது.

வேளாண் பல்கலைக்கழக தாவர மூலக்கூறு மற்றும் உயிரிதொழில்நுட்ப மையம் மற்றும் உயிரிதொழில்நுட்ப மகத்துவ மைய இயக்குனர் முனைவர் ந.செந்தில், தாவர தொழில்நுட்பவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஈ.கோகிலாதேவி, பேராசிரியர் முனைவர் சு.மோகன் குமார் ஆகியோர் இக்கருத்தரங்கினை தலைமை தாங்கினர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக தாவர தொழில்நுட்ப வியல் துறை பேராசிரியர் முனைவர் எம்.மணிகண்ட பூபதி, உதவிப் பேராசிரியர் முனைவர் வி.ராஜன்பாபு மற்றும் தி.பிருந்தா ஆகியோர் இக்கருத்தரங்கினை ஒருங்கிணைத்தனர்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் உயிரி தொழில் நுட்ப மையத்தில் நடைபெற்ற வேளாண் தொழில்நுட்ப தொழில்முனைவோர் கருத்தரங்கம் நேற்றுடன் நிறைவுபெற்றது.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வானொலியும் வேளாண்மையும் ஓர் பார்வை

அந்த காலத்துல இன்றைக்கு இருப்பதுபோல தகவல் தொடர்பு வசதி இல்லாத காலத்தில் விவசாயிகளுக்கு வேளாண்மை செய்திகளை உடனுக்குடன் வழங்கிய பெருமை வானொலியை சாரும். பசுமை புரட்சியின் தாக்கத்தை பட்டி தொட்டி வரை தனது ஒலிபரப்பால் கொண்டு சென்றபெருமை, வானொலி என்ற ரேடியோவை சாரும் என்பதில் மாற்று கருத்து இல்லை.



**வானொலி-யின் சிறப்புகள்**

அந்த காலத்தில் கிராமங்களில் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் வானொலி பெட்டி வைத்து பண்ணை இல்ல ஒலிபரப்பை ஒலிக்க விடுவார்கள். விவசாயிகள் அனைவரும் தரையில் அமர்ந்து அதனை கேட்டு தனது மூளையில் உள்வாங்கி விவசாயத்தில் சாதனை படைப்பார்கள். வானொலி உழவர் தம் வாழ்வு உயரவும், கிராமியம் செழிக்கவும், அகில இந்திய வானொலியில் பண்ணை இல்ல ஒளிபரப்பு 7.6.1966ல் தொடங்கப்பட்டது.

**வானொலியின் தனித்தன்மை**

நீண்ட நேரம் தொலைகாட்சியை பார்த்தால் கண் வலிக்கும். நீண்ட நேரம் மொபைல் போனை தடவி தடவி பார்த்தால் கை வலிக்கும். நீண்ட நேரம் வானொலி ஒலிபரப்பை கேட்டால் காது வலிக்காது. அத்தகைய சிறப்பு தன்மை உடையது தான் வானொலி.

**பிப்ரவரி 13 உலக வானொலி தினமாக யூனெஸ்கோ அறிவித்து, அதன்படி பிப்ரவரி 13 - 2011 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.**

**ரேடியோ நெல்**

இந்தியாவுல பசுமை புரட்சியின் வெற்றியின் தாக்கத்தை பட்டி தொட்டி எல்லாம் கொண்டு சேர்த்த பெருமை வானொலிக்கு உண்டு.

அந்த காலத்துல தமிழகத்தில் 6 வானொலி நிலையங்கள் செயல்பட்டன. நாள் தோறும் காலையில் 6.45 மணி முதல் 7 மணி வரையிலும் இரவு 7.25 முதல் 8 மணி வரையிலும் பல்வேறு தலைப்புகளில் வேளாண் சார்ந்த நிகழ்ச்சிகள் (மண்ணும் மணியும், வீடும் வயலும், உழவர் உலகம், ஏரும் ஊரும்) ஒலி பரப்பப்பட்டு விவசாயிகளுக்கு அவ்வப்போது பருவ கால நிலைக்கேற்ப தொழில்நுட்ப கருத்துகளை பரப்பி வந்துள்ளன. அந்த வகையில் ஏ.டி.டி 37 நெல்-லை இன்றுக்கு கூட டெல்டா மாவட்ட விவசாயிகள் ரேடியோ நெல்' என்று அடைமொழியுடன் செல்லமாக அழைக்கின்றனர் என்றால் ரேடியோவின் தாக்கத்தை என்ன சொல்வது.

**ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?**

அதுமட்டுமல்ல ஐ.ஆர் 8 நெல்லையும் அறிமுகப்படுத்தி விவசாயிகள் தங்களுடைய குழந்தைகளுக்கு ஐ.ஆர் 8 என்று பட்ட பெயரிட்டு அழைத்து வருவதை கூட கண் கூடாக பார்க்க முடிந்தது. இன்று கூட வானொலி பண்ணை பள்ளிகள் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன.

**வானொலி மன்றங்கள்**

1960 முதல் 1970 கால கட்டங்களில் வானொலியின் செயல்பாடுகள் முழுக்க முழுக்க பயனுள்ளதாக இருந்தது. யூனெஸ்கோ உதவியால் ' கிராமப்புற வானொலி மன்றங்கள் ' அமைத்து விவசாயிகள் உற்பத்தியில் சாதனை அடைந்தார்கள்.

**பண்ணை இல்ல ஒலிபரப்பு**

பட்டி தொட்டி வரை தனது கணீர் குரலால் நிகழ்ச்சிகளை கொண்டு சென்றவர்கள் துகிலி சுப்பிரமணியன் ஞான சூரிய பகவான் தென் கச்சி சுவாமி நாதன் தொண்டி மாணிக்கம் உட்பட பலர் இருந்தனர். என்றைக்கு தொலைகாட்சி வந்ததோ அன்றைக்கு ரேடியோவுக்கு தொல்லையாக மாறியது. ஆனால் இன்றைய கிராமப்புறங்களில் அதுவும் விவசாயிகள் மத்தியில் நீங்காத இடம் பிடித்து இருப்பது வானொலியே.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# எள் அறுவடை செய்வதில் கவனிக்க வேண்டியவை என்ன?



விருதுநகர், பிப்.13

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள நரிக்குடி வட்டாரம், சேவையூர் பயிர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் அக்ரி கிளினிக் ஆலோசகர் சந்திர சேகரன் கள ஆய்வு செய்யும் போது எள் அறுவடை செய்து தரமான எள்ளை பிரித்தெடுப்பது குறித்து முடுக்கன்குளம் முன்னோடி விவசாயி இராஜேந்திரன் நிலத்தில் அறுவடை செய்யப்பட்டு எவ்வாறு அதை அம்பாரமிடுவது என்பது பற்றி கூறுகையில், எள் செடிகளில் தொங்கும் காய்களில் ஒரு காயை பறித்து பிரித்து பிளந்து பார்த்தால் விதைகள் நிறம் மாறி கருப்பாக முதிர்ந்து காணப்படும்.

அதுவே அறுவடை செய்ய எற்ற தருணமாகும். ஓரிரு நாளில் அதனை அறுவடை செய்ய விட்டால் செடிகளிலிருந்து வெடித்து சிதறிவிடும். உடனடியாக ஆட்களை வைத்து வேருடன் அல்லது பாதியாக அறுவடை செய்து, களத்து மேட்டில் அம்பாரமாக குவியல் போல மாற்றி மாற்றி அடிக்கி வைக்க வேண்டும்.

அந்த குவியல் 7-10 நாட்கள் அப்படியே இருக்க வேண்டும். அப்போது தான் நுனித்தண்டில் உள்ள இளம் காய்கள் கூட காய்ந்து குவியலின் வெப்பதால் காய்ந்து முதிர்ச்சி அடையும்.

பின்பு குவியலை களைத்து செடிகளை வெயிலில் உலர்த்தி நன்றாக காயவைத்து உதறி தட்டி எள்ளை செடியிலிருந்து பிரித்தெடுக்க வேண்டும். அடியில் தார்பாலின் போட்டு தான் உதறி பிரித்தெடுக்க வேண்டும். அப்போது பொக்கு பதர் எள்ளுடன் கலந்து இருக்கும் காற்றில் தூற்றி முதிர்ந்த எள்ளை தனியாக பிரித்தெடுக்க வேண்டும்.

சாரசரியாக ஒரு ஏக்கருக்கு மானாவாரியாக 200- 250 கிலோ வரை மகசூல் கிடைக்கும் என்றார். தற்போது எள்ளுக்கு நல்ல விலை உள்ளதால் 120-130 / கிலோ நல்ல வருவாய் 3 மாதங் களிலே பெற வாய்ப்புள்ளது என்றார்.

வேளாண்துறை மூலமாக விவசாயிகளின் தரவுகளை மின்னனு மூலமாக சேகரிக்கப்பட்டு விவசாயிகளுக்கான தனித்துவமான அடையாள எண் வழங்கும் முகாமில் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனத்தை சார்ந்த விவசாயிகளை அவரவர் பகுதி உட்பட்ட வருவாய் கிராம அளவிலான முகாமில் பதிவு செய்ய கேட்டுக்கொண்டு கே.நெடுங்குளம் முகாமில் 10 விவசாயிகளை முகாம் பொறுப்பு அலுவலர் அனிதா மூலமாக பதிவேற்றம் செய்யப்பட்டது. இந்த முகாமானது தமிழகமெங்கும் நடைபெறுகிறுது.

விருதுநகர் மாவட்டத்தில் 10ம் தேதி முதல் தொடர்ந்து 10 நாட்களுக்கு நடைபெறும் என்றார். தனித்துவமான அடையாள எண் பெற்றால் தான் பிற்காலங்களில் விவசாயத்துறை சார்ந்த 23 துறைகளின் சலுகை கள் மானியங்களை பெற முடியும்.




எனவே நம்முடைய FPO விவசாயிகள் (1317 SHARE HOLDERS) உடனடியாக உரிய ஆவணங்களுடன் (பட்டா சிட்டா ஆதார் எண் அதனுடன் இணைக்கபட்ட செல்போன் ஆகியவற்றை பதிவிற்கு (FARM RESISTRY) கொண்டு செல்ல வேண்டுமென கூறினார்.

இந்த FPO மற்றும் AGRI CLINIC சிசிடியின் செயல் இயக்குநர் பத்மாவதி திட்ட இயக்குநர் ஜான் பிரிட்டோ வழிகாட்டுதலின் பேரில் செயல் அலுவலர் பார்த்த சாரதி மேற்பார்வையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. கோடை சாகுபடிக்கான நெல் விதைகள் நிலக்கடலை விதை மற்றும் உரங்கள் & பூச்சி மருந்துகள் தேவையான அளவில் இருப்பில் உள்ளது. இயற்கை இடுபொருள்களான பஞ்ச காவியா, மீன் அமிலம் பூச்சி விரட்டி கசாயம் விற்பனைக்கு உள்ளது.

கள பயணத்திற்கான ஏற்பாடுகளை கள பணியாளர்கள் பரதன் & பிரியா சிறப்பாக செய்தனர்.


Rithvik Pipe
PIPING FOR LIFE
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
இந்தியாவில் முதல் முறையாக ISI PVC பைப்புகளுக்கு
25 வருட உத்திரவாதம் தரும் ஓரே நிறுவனம்
ஒவ்வொரு பைப்புகான ஆய்வக சோதனை அறிக்கை ஒவ்வொரு பைப்பிலும் QR CODE மூலம் கொடுக்கபட்டுள்ளது.
ஒவ்வொரு பைப்புக்கும் 25 வருட உதிரவாதம் (6 KG - க்கு மேல்)
ஒவ்வொரு ரித்விக பிவிசி பைப்புகளும் இந்திய தர நிர்ணய பணியகம் (பிஐஎஸ்) நிர்ணயித்த கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தபட்டு தயாரிக்கப்படுகிறது.
ஒவ்வொரு ரித்விக் PVC பைப்புகள் உயர்தர மூலப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. தரம் மற்றும் நீண்ட ஆயுளை உறுதி செய்கிறது.
வியாபார தொடர்புக்கு
வெங்கடரமணன் - 7561822226,9645877779
RITHVIK PIPE

# நெல் சாகுபடியில் இயந்திரமயமாக்கல் மற்றும் சாண எரிவாயு குறித்து செயல் முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



செங்கல்பட்டு, பிப்.13

செங்கல்பட்டு பாபுராயன்பேட்டையில் இயங்கி வரும் எஸ்.ஆர்.எம் வேளாண் அறிவியல் கல்லூரியில் இறுதி ஆண்டு வேளாண்மை துறை மாணவர்கள் மேற்கொள்ளும் கிராம புற பணி அனுபவத் திட்டத்தின் கீழ் செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம்,






சிறுதாவூர் கிராமத்தில் 90 நாட்கள் தங்கி விவசாய பணிகள் குறித்து பயின்று வருகின்றனர். இதன் கீழ் முதல்வர் அறிவுரையின் படியும் பேராசிரியர்களின் வழி காட்டுதலின் படி பேராசிரியர்கள் Dr. S.சிவக்குமார் மற்றும் Er. J.கணேமூர்த்தி ஆகியோர் நெல் சாகுபடியில் இயந்திரமய மாக்கல் மற்றும் சாண எரிவாயு குறித்து செயல் முறை விளக்கம் அளித்தனர்.

இவ்விழாவிற்கு மானாம்பதி ஊராட்சி மன்ற தலைவர் வழக்கறிஞர் K.தேவராஜ் தலைமை தாங்கினார். வேளாண் கல்லூரி மாணவர்கள் சுசீந்தர் பாபு.இ, அபிசேக்.சு, ராகுல்.ரா, அருண்குமார்.ச, காமேஷ்வரன் பொ, மணிகண்டன்.ச, ருதீஷ்.ர.சு, குணசீலன்.ந, ரவீன் குமார்.மு, சதீஷ் குமார்.சு, சரண் மு சே உள்ளிட்டோர் ஏற்பாடு செய்த இவ்விழாவில் ஊர் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று அவர்களது சந்தேகங்களை கேட்டறிந்தனர்.

# விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் பற்றிய விவசாய பயிற்சி நடைபெற்றது



திருச்சி, பிப்.13

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டாரம், கோமகுடி கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் தரமான விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் பற்றிய விவசாய பயிற்சி நடைபெற்றது.

இதில் லால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சத்தியபிரியா பேசுகையில், மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங் கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், நுண்ணீர் பாசன திட்டம், விவசாயிகளுக்கு மானிய விலையில் ஜிப்சம், சிங்சல்பேட், தக்கை பூண்டு, உயிர் உரங்கள் போன்றவற்றை பெற்றுக் கொள்ள விவசாயிகளுக்கு விரிவாக விளக்கிக் கூறினார். விதை சான்றளிப்பு மற்றும் அங்கக சான்றளிப்புத் துறை வேல் முருகன், விதை சான்று அலுவலர் பேசுகையில், உயிர் உர விதைநேர்த்தி, உயிர் உரங்கள் பயன்படுத்துதல், சான்று அட்டை பொருத்திய விதைகள் பயன்படுத்துதல், நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் அட்மா திட்டத்தில் கண்டுணர்வு சுற்றுலா விவசாயிகள் பயிற்சி செயல் விளக்கங்கள் பற்றி விரிவாக விளக்க கூறினார். உதவி தொழில் மேலாளர் கார்த்திக் பேசுகையில், உழவன் செயலி, பாரதப் பிரதமரின் விவசாயிகள் கௌரவ நிதி திட்டத்தில் அனைவரும் தங்களது சுய விபரத்தை பதிவு செய்து தொடர்ந்து தவணை பெற கூறினார். பயிற்சியில் கோமகுடி கிராமத்தைச் சேர்ந்த பல முன்னாடி விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். பயிற்சியின் முடிவில் விவசாயிகள் அனைவருக்கும் நில உடமை சரிபார்த்து தனி அடையாள எண் வழங்கப்பட்டது.

இதற்கான ஏற்பாட்டினை வேளாண்மை உதவி அலுவலர் எடிசன் அட்மா திட்ட பணியாளர்கள் செய்திருந்தனர்.

# விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் பற்றிய விவசாய பயிற்சி நடைபெற்றது



திருச்சி, பிப்.13

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டாரம், கோமகுடி கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் தரமான விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் பற்றிய விவசாய பயிற்சி நடைபெற்றது.

இதில் லால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சத்தியபிரியா பேசுகையில், மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங் கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், நுண்ணீர் பாசன திட்டம், விவசாயிகளுக்கு மானிய விலையில் ஜிப்சம், சிங்சல்பேட், தக்கை பூண்டு, உயிர் உரங்கள் போன்றவற்றை பெற்றுக் கொள்ள விவசாயிகளுக்கு விரிவாக விளக்கிக் கூறினார். விதை சான்றளிப்பு மற்றும் அங்கக சான்றளிப்புத் துறை வேல் முருகன், விதை சான்று அலுவலர் பேசுகையில், உயிர் உர விதைநேர்த்தி, உயிர் உரங்கள் பயன்படுத்துதல், சான்று அட்டை பொருத்திய விதைகள் பயன்படுத்துதல், நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் அட்மா திட்டத்தில் கண்டுணர்வு சுற்றுலா விவசாயிகள் பயிற்சி செயல் விளக்கங்கள் பற்றி விரிவாக விளக்க கூறினார். உதவி தொழில் மேலாளர் கார்த்திக் பேசுகையில், உழவன் செயலி, பாரதப் பிரதமரின் விவசாயிகள் கௌரவ நிதி திட்டத்தில் அனைவரும் தங்களது சுய விபரத்தை பதிவு செய்து தொடர்ந்து தவணை பெற கூறினார். பயிற்சியில் கோமகுடி கிராமத்தைச் சேர்ந்த பல முன்னாடி விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். பயிற்சியின் முடிவில் விவசாயிகள் அனைவருக்கும் நில உடமை சரிபார்த்து தனி அடையாள எண் வழங்கப்பட்டது.

இதற்கான ஏற்பாட்டினை வேளாண்மை உதவி அலுவலர் எடிசன் அட்மா திட்ட பணியாளர்கள் செய்திருந்தனர்.

# வெடால் கிராமத்தில் டிரோன் தொழில்நுட்ப பயிற்சியில் வேளாண் கல்லூரி மாணவர்கள்



செங்கல்பட்டு, பிப்.13

வெடால் கிராமத்தில் எஸ்.ஆர்.எம். வேளாண் அறிவியல் கல்லூரி இறுதியாண்டு கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்ட (RAWE) ரோஜர்ஸ் குழு மாணவர்கள் அஸ்ட்ராக்ஸ் (Astrox) நிறுவனத்தின் வழிகாட்டுதலுடன் டிரோன் தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சி நடத்தினர்.

விவசாய நிலங்களுக்கு உரங்களை எடுத்துச் செல்ல தேவையான பாதைகள் இல்லாததால் விவசாயிகள் பல்வேறு







சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்தனர். இந்த சிக்கலைத் தீர்க்க டிரோன் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை மாணவர்கள் விளக்கினர்.

மாணவர்கள் டிரோன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகள் தெளிக்கும் முறையை நேரடியாக காண்பித்தனர். இந்த தொழில்நுட்பம் குறைந்த நேரத்தில் அதிக பரப்பளவில் வேலைசெய்யும் திறனை கொண்டதுடன், விவசாய செலவுகளை குறைக்கும் என்பது விவசாயிகளுக்கு விளக்கப் பட்டது.

இந்த நிகழ்ச்சியில் ஊராட்சி மன்றத் தலைவர் முத்தமிழ் பாக்கியநாதன், மகேந்திரன், முத்துக்குமரன் (வேளாண் அலுவலர்கள்) ஆகியோர் கலந்து கொண்டனர். விவசாயிகள் டிரோன் தொழில்நுட்பம் குறித்து ஆர்வம் காட்டி, தங்கள் நிலங்களில் இதைப் பயன்படுத்துவதைப் பற்றிய கேள்விகளை எழுப்பினர். இந்த பயிற்சி விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

# ஆடு, மாடுகளில் வயிற்றுப் புழுத்தாக்கம் (ஆம்பிஸ்டோமியோஸிஸ்) மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள்



நம் நாட்டில் கிராமப்புங்களில் வாழும் மக்கள் உழவுத் தொழிலோடு கால்நடைகளையும் தொன்றுதொட்டு வளர்த்து வருகிறார்கள். நம் முன்னோர்கள் தங்களுடைய குடும்பத்திற்கு தேவையான பால் மற்றும் அன்றாட வருமானத்திற்காக ஓரிரு மாடுகளை வளர்த்து வந்தார்கள். ஆனால் இன்று மக்கள் தொகை பல மடங்காக பெருகி விட்டதால் பால் மற்றும் பால் பொருட்களின் தேவையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகிறது. அதனால் இதுவரை உபதொழிலாக செய்யப்பட்டு வந்த மாடு வளர்பபு இன்று பலராலும் நவீன தொழில்நுட்பத்துடன் பால் பண்ணைத் தொழில் முக்கிய பிரதான தொழிலாக செய்யப்படுகிறது. அதிக பால் பெறுவதற்காக கலப்பின மாடுகளே அதிகமாக வளர்க்கப் படுகிறது. இந்த கலப்பின மாடுகள் பல நோய்களின் தாக்கத் திற்கு எளிதாக உட்பட்டு பால் உற்பத்தி குறைவதற்கு வாய்ப்பு உள்ளது. நுண்ணுயிரி, நச்சுயிரி மற்றும் ஒட்டுண்ணி நோய்களால் பாதிப்புக்கு உள்ளாகிறது. ஓட்டுண்ணிகளில் ஆம்பிஸ்டோம் என்ற வயிற்றுப்புழு ஆடு, மாடுகளில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இந்த வயிற்றுப்புழுவானது எவ்வாறு பரவுகிறது, என்னென்ன பாதிப்புகள் ஏற்படுகிறது மற்றும் எவ்வாறு தடுக்கலாம் என்பதைப் பற்றி இக்கட்டுரையில் தெரிந்து கொள்வோம்.

கால்நடைகள் மூன்று வகையான ஒட்டுண்ணி புழுக்களின் தாக்கத்திற்கு உட்படும். அவை தட்டைப்புழு, நாடாப்புழு மற்றும் உருண்டைப்புழுக்களாகும். வயிற்றுப்புழுவானது தட்டைப்புழு வகையைச் சார்ந்ததாகும்.


## நோய்க்கு காரணமான வயிற்றுப்புழுக்கள்

இந்நோய் ஆம்பிஸ்டோம் என்று அழைக்கப்படும் 8 வகையான புழுக்களால் ஏற்படுகிறது. இந்த புழுக்கள் மாட்டின் வயிறு மற்றும் சிறு குடல் பகுதியில் காணப்படும். வயிற்றுப்புழுக்கள் பருத்தும் கெட்டியாகவும் மற்றும் இளஞ்சிவப்பு நிறத்திலும் இருக்கும். குறிப்பாக மாதுளை விதை போன்று வயிற்றின் சுவரில் ஒட்டிக்கொண்டிருக்கும்.

## நோய் தாக்கம் காணப்படும் பருவகாலம்

இந்நோயின் தாக்கம் குறிப்பாக கோடை இறுதியிலும் இலையுதிர்காலம் மற்றும் முன் குளிர் காலத்திலும் காணப்படும். தமிழ்நாட்டில் வளர்க்கப்படும் ஆடு மாடுகளில் முக்கியமாக குளம் குட்டைகள் உள்ள பகுதிகளில் தை, மாசி, பங்குனி மாதத்தில் அதிகமாக காணப்படும். ஏனென்றால் இந்தப் புழுக்களின் முட்டைகள் மிதமான தட்பவெப்ப நிலை நிலவும் காலங்களில் பொரிக்கக்கூடியதாகும்.

## நோய் பரவும் முறை




பாதிக்கப்பட்ட ஆடு மாடுகளிலிருந்து முட்டைகள் சாணம் வழி யாக வெளியேறுகிறது. முட்டையிலிருந்து மிராசிடியம் என்ற இளநிலை பருவம் வெளியேறி தண்ணீரில் நீந்திக் கொண்டு இருக்கும். பிறகு நத்தைக்குள் சென்று ஸ்போரோசிஸ்ட் ரீடியா மற்றும சர்கேரியா பருவமாக நத்தைக்குள் வளர்ச்சியடையும். அதன் பிறகு நத்தையிலிருந்து சர்கேரியா வெளியேறி புற்களில் ஒட்டிக்கொண்டு மெட்டாசர் கேரியாக வளர்ச்சியடைந்து, புற்களின் விளிம்புகளில் ஒட்டிக் கொண்டிருக்கும். பொதுவாக தை, மாசி மற்றும் பங்குனி மாதங் களில் பசுமையான புற்கள் நீர் நிலைகளின் கரையோரங்களில் மட்டும் காணப்படுவதால் மாடுகள் மற்றும் ஆடுகள் ஆவலோடு மேயச்செல்லும் போது புற்களோடு மெட்டாசர்கேரியாவும் குடலுக்குள் சென்றடைகிறது. பிறகு முன்குடலில் மெட்டாசர் கேரியா தனது வெளித்தோலை உரித்து குடல் பகுதியில் ஒட்டிக்கொணடு 6 மதல் 8 வாரங்கள் தங்கிவிடும். சிறிய புழக்களாக இருந்தால் முன்நோக்கி ரெட்டிக் குளம் வழியாக நகர்ந்து வயிற்றுக்குள் சென்று பருவமுதிர்ச்சி அடையும். வயிற்றுக்குள் நன்றாக சிவப்பு நிறத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும். இது மாதுளை பழம் விதை போன்று பார்ப்பதற்கு தோற்ற மளிக்கும். இதற்காக ஆகும் காலம் 6 வாரம் முதல் 4 மாதங்கள் ஆகும். இதன் பிறகு அதிக எண்ணிக்கையில் பெருக்கம் ஏற்பட்டு நான்காம் வயிறான செரிவயிறுக்குச் சென்று குடல் பகுதி சவ்வைப் பாதிக்கும். அதனால் துர்நாற்றக் கழிச்சல் ஏற்படும். கடைசியாக முட்டை சாணம் வழியாக வெளியேறும்.


## நோயின் அறிகுறிகள்



வயிற்றுப்பகுதியில் காணப்படும் முதிர்ந்த புழுக்களால் எந்தவித பாதிப்பும் அதிகம் இருக்காது. ஆனால் சிறு குடலில் வாழும் இளம்புழுக்கள் குடலின் சவ்விற்குள் ஆழமாக புதைந்து குடல் நீட்சி மற்றும் குடல் சவ்வுகளை அழித்து விடக்கூடும். ஆகையால் இரத்தக்கசிவு ஏற்பட்டு குடல் வீக்கம் காணப்படும். பாதிக்கப்பட்ட கால்நடைகளில் புரதக்கசிவு ஏற்பட்டு இரத்தத்தில் புரதசத்து குறைந்து நீர் கோர்ப்பு (வீக்கம்) ஏற்படும். முக்கியமாக கீழ்த்தாடையில் பாட்டிலை செறுகியதுப் போல வீங்கியிருக்கும் (Bottle jaw condition). வியிற்றுப் போக்கு தண்ணீயாக பீச்சியடிக்கும். கெட்ட வாடை யடிக்கும். அடிக்கடி தண்ணீர் குடிக்கும். மாடு நாளடைவில் மெலிந்து விடும். கன்று களில் நோயின் தாக்கம் அதிகமாக இருக்கும். அதிகம் பாதிக்கப்பட்ட இளம் கன்றுகளில் இறப்பு காணப்படும்.





**நோயை கண்டறியும் முறைகள்**

1. நோய் அறிகுறிகள் மற்றும் மேய்ச்சல் பற்றிய விபரங்க்ளை சேகரித்தல்.

2. வயிற்றுப்போக்கு சாணத்தில் இளம்புழுக்கள் காணப்படும்.

3. சாணப்பரிசோதனை மூலம் ஆம்பிஸ்டோம் முட்டையை கண்டறியலாம்.

4. இறந்த கால்நடைகளை பிரேத பரிசோதனை செய்து பார்த்தால் வயிறு மற்றும் குடல் பகுதியில் உள்சவ்வில் மாதுளை விதை போன்று சிவப்பு கலரில் முதியுற்ற புழுக்கள் மற்றும் புழுக்கள் கொத்து கொத்தாக ஒட்டிக் கொண்டிருக்கும்.



**சிகிச்சை முறை**

1. ஆக்ஸிகுளொசனைடு ஒரு கிலோ உடல் எடைக்கு 10 முதல் 15 மில்லி கிராம் கொடுக்கலாம்.

2. ரப்பாக்ஸனைடு 75 மி.கி உடல் எடைக்கு கொடுக்கலாம்.

3. நிக்லஸொமைடு 1 கிலோ உடல் எடைக்கு 90 மி. கிராம் கொடுக்கலாம்.

**கட்டுப்படுத்தும் முறை**

இந்நோய் பொதுவாக தை, மாசி மற்றும் பங்குனி மாதங்களில் அதிகமாக காணப்படும். ஏனென்றால் இந்த சமயத்தில் குளம் குட்டைகளை சுற்றியுள்ள பகுதிகளில் மட்டும் தான் புற்கள் அதிகமாக வளர்ந்திருக்கும். ஆகையால் குளம் குட்டையை சுற்றியுள்ள பகுதிகளில் அதிகம் மேயவிடக்கூடாது. நீர் நிலைகளில நத்தைகளை கட்டுப்படுத்த வேண்டும். நோய்க் கண்ட கால்நடைகளுக்கு குடற்புழு நிக்க மருந்து கொடுக்க வேண்டும்.

தகவல் : **முனைவர் ந.ராணி, முனைவர் த.ரமா மற்றும் முனைவர் கு.பொன்னுதுரை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், உடுமலைப்பேட்டை.**

தலைக் கவசம் உயிர்க் கவசம்


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits.
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.